# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

விலை ரூபா 5/-

தீபம் - 51 | சித்திரை 1999 | பக்கங்கள் 12 | ஒளி 36


## கூட்டுறவு நிறுவனங்கள் யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்தும் சொத்துக்களை இழந்தும்

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு சேவை செய்கிறது!

### நூல் அறிமுக விழாவில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் பாராட்டு

"கடந்த காலங்களில் யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலைகளினால் மக்கள் இடம்பெயர்ந்த போது கூட்டுறவுச சங்கங்கள் மக்களுக்கு மிகமுக்கியமான அத்தியாவசிய சேவைகளை ஆற்றிவந்தமையை எவரும் மறுக்கமுடியாது. மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னரும் கூட்டுறவு நிறுவனங்கள் பல சொத்து இழப்புக்கள் மத்தியிலும் இன்றும் அத்தகய சேவைகளை ஆற்றி வருவதை பாராட்டாமல் இருக்கமுடியாது.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையும் இணைந்து நடாத்திய "கூட்டுறவுக் கோர் அறிமுகம்" என்னும் நூல் அறிமுகவிழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்.பல்கலைக்கழககைலாசபதி கலை அரங்கில் பல்கலைக்கழகதுணை வேந்தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது

இவ்விழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

தென்னிலங்கைக் கூட்டுறவாளர்களுக்கு யாழ்ப்பாணத்து கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிதான் முன்னுதாரணமாக இருந்து வந்துள்ளது யாழ்ப்பாணத்து மக்களுடன், அவர்களுடைய சமூகக்கடமைகளுடன் கூட்டுறவு வாழ்க்கை பின்னிப்பிணைந்துள்ளமையை யாவரும் அறிவார்கள். இந்நிலையில் எம்முடன் இரண்டறக்கலந்துள்ள கூட்டுறவுத்துறையைப் பற்றிய செய்திகளை, வரலாறுகளை எமது இளம்சந்ததியினர் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். இதற்குப் பயன்படும் வகையில் இந்நூல் வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

நாம் கூட்டுறவுத்துறையில் இழந்தவற்றைப் பெறுவதற்கும் எமது கூட்டுறவு முன்னோர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் இதுபோன்ற முயற்சிகள் தேவை என்று அரசஅதிபர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை தலைமை உரையில் கூறியதாவது.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தளவில் கூட்டுறவுத்துறை சம்மந்தமாக அதன் செயற்பாடு, நடவடிக்கைகள்சம்மந்தமான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் ஒவ்வோர் செயற்பாடுகளின் வாண்மை விருத்தி சம்மந்த

(12ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுத்துறையின்வளர்ச்சிக்கு திறனானதலைமைத்துவம்தேவை!

"எந்தவொருநாட்டினதும்பொருளாதார அபிவிருத்திக்கு கூட்டுறவுத் துறையைப் போல் சிறந்த துறை வேறொன்றும் இல்லை. பலர் ஒன்று கூடி இத்துறையில் இணைந்து செயல்படுவார்களா? என்ற கேள்வி எழச் செய்கிறது. இதனைத் திறம்படச் செய்து முடிப்பதற்கு நிச்சயம் சிறந்த தலைமைத்துவம் தேவை"

(2ம் பக்கம் பார்க்க)

## உள்ளே...


☆ சூழல் பாதுகாப்பில் வேம்பின் பயன்

☆ கண்தானம்பற்றி அறிந்திடுவோம்

☆ முகாமையியல் சூழலும் சமூகப் பொறுப்பும்

☆ ஆடல் அரங்கின் பன்முகவளர்ச்சி

☆ எருமை முட்டிய புராணம்


★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி தருவளோ பிரமாதி

ஆண்டு பிரமாதிப் -
பெண்ணவள் மலர்ந்தனள் !
மீண்டு தருவளோ ? -
மண்ணினில் அமைதியை !
ஈண்டும் எங்கணும் -
புரிந்துணர்வைப் பரப்பி நாம்
வேண்டும் நலமது -
விரைந்து அளிப்பளோ ?

நாயன்மார்கட்டு,
ப. மகேந்திரதாசன்

## வீரசிங்கம் மண்டபம் புனரமைப்புவேலை ஆரம்பம்!

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் பேரழிவுக்குட்பட்ட வீரசிங்கம்மண்டபத் திருத்தவேலைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ. கு. சண்முகநாதன் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திரு. பா. செந்தில்நந்தனன், திட்டப்பணிப்பாளர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் மாவட்டச் செயலாளர் திரு எஸ். சிவசுப்பிரமணியம், புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை பொறியியலாளர், திரு. ப.கிரிதரன் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், இரண்டாம்படி சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள், மகளிர் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சர்வதேசக் கூட்டுறவு இணைப்பு நிறுவனம் 1995ல் பிரகடனப்படுத்திய ஏழு கூட்டுறவுக் கொள்கைகள்

☆ தன் விருப்பார்ந்த தடையற்ற (திறந்த) உறுப்புரிமை.
☆ ஜனநாயக முறையில் அமைந்த கட்டுப்பாடும் நிர்வாகமும்.
☆ அங்கத்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு
☆ சுதந்திரமாகவும், சுயமாகவும் தொழிற்படல்.
☆ கல்வி, பயிற்சி, தகவல்.
☆ கூட்டுறவுச்சங்கங்களிடையே ஒத்துழைப்பு
☆ சமூகமேம்பாடு.

## கூட்டுறவுத்துறையின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு பெ கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டுறவுச்சங்கத் தலைவர்களுக்கான செயலமர்வினை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர். பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக வணிகத் துறையும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடாத்திய இச்செயலமர்வில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், இரண்டாம் படிச்சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

பேரசிரியர் பொ பாலசுந்தரம் பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

எமது கூட்டுறவுத்துறையின் வரலாற்றில் அரசின் உதவியும், மானியமும் அதிக அளவில் இருப்பது கூட்டுறவுத் துறையின் வளர்சிக்கு சாபக்கேடாக உள்ளது கூப்பனுக்கு உணவு விநியோகம் ஆரம்பித்து இன்று, நிவாரணப் பங்கீட்டுப்பொருட்களை வழங்கும் நிறுவனங்களாக உள்ளன இந்நிலையில் இந்தப் பங்கீட்டு முறையிலான உணவுவிநியோகத்துடன் கூட்டுறவுத்துறை நிலைத்து நிற்குமா ? என்ற கேள்வி எழுகிறது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தளவில் பலநோக்கில் செயற்பட்டுவரும் கூட்டுறவு நிறுவனங்கள் கடந்தகாலங்களில் பல சேவைகளைச் செய்து வந்துள்ளது. கூட்டுறவுத் தலைமைத்துவத்துக்கு ஐயுறவுக்கு இடமில்லாத வகையில் இதயசுத்தியான தலைமைத்துவமும் நவீன வியாபார உத்திகளுடன், புதிய செயற்பாடுகளில் அனுபவமும் ஆற்றலுமே தேவையாகும்.

நவீன தொழில்துறைகளிலும், புதிய தந்திரோபாய, நடவடிக்கைகளிலும் போதிய பயிற்சிகளை பணியாளர் மட்டத்திலும் முகாமை மட்டத்திலும் வழங்க பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்று கூறினார்.

யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்டவிரிவுரையாளர் திரு. இ. இரத்தினம் ''கூட்டுறவு அபிவிருத்தியும் தலைமைத்துவமும்'' என்னும் தலைப்பிலும், கல்வியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி ''கூட்டுறவு நிறுவனங்களின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பு'' என்னும் தலைப்பிலும், வணிகத்துறை தலைவர் திரு க தேவராசா 'மனித வளமுகாமைத்துவத்தின் முக்கியத்துவம்'' என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினார்கள்.

மாவட்டச் செயலாளர் திரு. எஸ் சிவசுப்பிரமணியம் நன்றியுரை நிகழ்த்தினார்.

## சுவாமி விவேகானந்தரின் கல்வி பற்றியசிந்தனை

பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப்போராட்டத்திற்குத்தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவிபுரியும் ஊக்கத்தையும், சிங்க போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாதகல்வி, அதைக்கல்விஎன்றுசொல்வதுபொருத்தமா? எத்தகையகல்விதன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ அது தான் உண்மையான கல்வியாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்பில் வேம்பின் பயன்

## மண்வளம்

குறிப்பிட்ட பிரதேசத்தில் நீர், நிலம், காற்று என்பன இயல்பான நிலையில் இருந்து மாறுபாடு அடையும் போது சூழல் மாசு அடைகிறது என்று சொல்லப்படுகிறது சூழல் பாதுகாப்பில் வேம்பின் பங்கு தனித் தன்மையானது. இன்றைய சூழ்நிலையில் நாம் எங்கு சுவாசித்தாலும், அங்கு காற்று சுத்தமில்லாது இருப்பதை அறிவோம். நல்ல காற்றுக் கிடைக்காதா என ஏங்குகின்றோம்.

வேப்பமரமானது காற்றில் ''புரோகிபிரிஸ்'' என்ற நாசினியைக் கசியவிட்டு காற்றிலுள்ள கிருமிகளை அழிப்பதுடன் நஞ்சுத் தன்மைகளை அகற்றி காற்றைச் சுத்தப்படுத்தும் இயந்திரமாகத் தொழிற்படுகிறது. ''சாகர்'' பல்கலைக் கழகத்தில் டாக்டர் என் கே சாக்ஸேனா என்பவர் ''புரோகிபிரிஸ்'' (Prohibitis) என்றவயு வேப்பமரத்திலிருந்து வெளியாகி கிருமிகளுடன் இணைந்து அவற்றின் இயக்கத் தொழிற்பாடுகளைத் தடைசெய்து அழித்துவிடும் எனக்கண்டுள்ளார். இந்த உண்மையை 1891ம் ஆண்டிலேயே ஜோர்ஜ்வாட் என்பவர் வேப்ப மரங்கள் உள்ள கிராமங்களில் நோய் குறைவாகவும் வேப்பமரங்கள் அற்ற கிராமங்களில் நோய்கள் அதிகமாகவும் இருந்தமையை ஆதாரங்களுடன் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் இடத்தில் ஒருசில தொற்று நோய்கள் பரவ இருப்பதை முன் கூட்டியே சில அறிகுறிகளைக் காட்டி எமக்கு எச்சரிக்கை செய்வதிலும் வேம்பு முக்கிய இடம் வகிக்கின்றது. வேம்பின் இலைகள் நன்றாக இருந்து திடீரென வெண்மையாக மாறிக் காய்ந்து போக ஆரம்பித்தால் ஒரு வித விஷக்கிருமியினால் நோய் ஏற்படப் போகிறது என்பதை எமது முன்னோர்கள் முன்கூட்டியே அறிந்து கொள்வார்களாம்.

வேம்பு நச்சுக்காற்றை இலை மூலம் உறிஞ்சி தன்னுள் எடுத்துக் கொள்கின்றது. பின் இலைகள் உதிர்ந்து விழுவதன் மூலம் எம்மையும் எமது சுற்றாடலையும் பாதுகாக்கின்றது. இதனை நாம் விளங்கிக் கொள்வதற்கு ''போபால்'' (இந்தியா) விஷவாயுக்கசிவு மிகச் சிறந்த உதாரணமாகும்.

1984ம் ஆண்டு போபாவிலுள்ள இந்திய யூனியன் கார்பைட்தொழிற்சாலையிலிருந்து ''மீதைல் ஐஸோசயனேற்'' என்ற வாயுக்கசிவினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததையும் 12 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். இப்பிரதேசத்தில் அப்போது மரங்களில் ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வு செய்த போது எல்லா வகை மரங்களையும் விட அதிக அளவில் வேப்பமரமே பாதிக்கப்பட்டிருந்தது. வேம்பின் இலைகள் விஷவாயுவை உறிஞ்சி பின் உதிர்ந்து விட்டன. அந்தளவிற்கு சூழலிலுள்ள அசுத்த வாயுக்களை உறிஞ்சி சூழலைத்தூய்மைப்படுத்துகிறது இதனால் தான் போலும் வேம்பை 'நீலகண்டன்'' என்று எமது முன்னோர்கள் அழைத்துள்ளார்கள். இந்துக்களின் முழு முதல் கடவுளாகிய இறைவன் தேவர்களைக் காப்பதற்காக நஞ்சை உட்கொண்ட போது அது தொண்டையில் நின்றதினால் இறைவனுக்கு நீலகண்டன் என்ற பெயர் வழங்கப்பட்டது. அது போன்றே வேம்பும் நீலகண்டன் என்ற பெயரைப் பெற்றுக்கொண்டது. இன்றும் கிராமங்களில் உள்ள இந்துக்கோவில்களில் வேப்பிலை கட்டுவதையும் கோவிலைச்சுற்றி வேப்ப மரம் நடுவதையும் அல்லது, வேப்ப மரத்தின்கீழ் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

குழந்தை பிறந்த வீட்டிலும், அம்மை நோய் பிடித்தவர்களின் வீட்டிலும் வீட்டுவாசலில் வேப்பிலை கட்டும் வழக்கம் இன்றும் கிராமங்களில் காணப்படுகிறது. இப்படிச்செய்வதன் மூலம் வெளியில் இருந்து வருபவர்களின் நோய் தாயையும் சேயையும் தொத்திக்கொள்ளாமல் தடுக்கிறது. அதே போல் வெளியில் இருந்து வருபவர்களுக்கு அம்மை நோய் தொற்றிக் கொள்ளாமல் தடுக்கப்படுகிறது அத்துடன் இது பிள்ளை பிறந்த வீடோ அல்லது அம்மை நோயுள்ள வீடோ என வாசலில் தொங்கும் வேப்பிலை எச்சரிக்கையின் சின்னமாக விளங்கும்.

15 வகையான மரங்களை நாட்டி நச்சுவாயு ஊட்டி வளர்க்கப்பட்ட போது நச்சுவாயுவை தாங்கி வளரும் இயல்பு வாகை, சாக்கொன்றை என்பவற்றுக்கு அடுத்தபடியாக வேம்பு உள்ளது வேப்பமிலையின் விளிம்பில் பற்களும், கோண அமைப்பும் அதன் சுற்றளவையும் பரப்பு விகிதத்தையும், அதிகரிக்கின்றது. இலையின் சுற்றளவும், பரப்பு விகிதமும் கூடுதலாகவுள்ள வேப்பமரத்துக்கு தூசியை வடிகட்டும் திறன் அதிகளவில் இருப்பதாக சுற்றுப்புறவியல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சன நெருக்கடியும் வாகனப் போக்குவரத்தும் அதிகமுள்ள நகரங்களுக்கும் நகரைச் சுற்றி வேப்பமரங்களை வளர்ப்பதன் மூலம் நகரின் தூய்மையையும், சுகாதாரத்தையும் பேணிக்கொள்ளலாம். நைஜீரியாவின் நகர்ப்புறங்களில் தோப்புகள் அமைத்து நகரைப் பாதுகாக்கிறார்கள்: அங்குள்ள விறகுத் தேவையையும் மரத்தளபாடத் தேவைகளையும், வேப்பம் தோப்புக்களைப் பயன்படுத்திப் பெறுகிறார்கள். சூடான் நாட்டில் சாலை ஓர மரங்களாக வேம்பை நாட்டி நகரைப் பேணுவதுடன் நகருக்கு அழகையும் ஏற்படுத்துகிறார்கள்.

பயிர் வகைகள், செடிகள் போன்றவை காற்று வேகமாக வீசும்போது பாதிக்கப்பட்டு வளர்ச்சி தடைப்படுகிறது சில சமயங்களில் பயிர்வகைகள் பாட்டத்தில் சரிந்து விழுகின்றன. வேப்பமரத்தை எல்லை ஓரங்களில் நடுவதன் மூலம் காற்றின் வேகத்தைக் குறைத்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். நைஜர் நாட்டில் மஜ்ஜியா பகுதியில் (350 - 400 மி. மீ. மழை) பண்ணையில் 6 வீதமான

(8 பக்கம் பார்க்க)

**மு. கந்தசாமி**
விரிவுரையாளர், யாழ். கல்லூரி,
விவசாய நிறுவனம். மருதனார்மடம்,

# கண்தானம் பற்றி அறிந்திடுவோம்.

சென்ற மார்ச் 31ம்திகதி கொண்டாடப்பட்ட கண்தான தினத்தை ஒட்டிகண்தானத்தைப்பிரபல்யப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, அம் முயற்சி நிறைவேறா நிலையில் உயிர் நீத்த கூட்டுறவாளர், தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களது விருப்பை நிறைவேற்றும் ஓர் முயற்சியாக இக் கட்டுரை, பிரசுரிக்கப்படுகிறது.

## சுகவளம்

### கண்தானம் என்றால் என்ன?

இறந்தவுடன் தமது கண்களைத் தானமாக ஏற்று, விளிவெண் படலம் பாதிக்கப்பட்டதால் பார்வையற்றுப் பரிதவிப்போருக்குப் பார்வை வழங்கப் பயன்படுத்துமாறு எவராவது விருப்பம்தெரிவித்திருந்ததனால், அல்லது, இறந்தவரின் உறவினர்கள் சடலத்திலுள்ள கண்களைத் தானம் செய்யவிரும்பியதால், கண்தானத்தை ஏற்கும் வசதிபடைத்த வைத்திய சாலையின் வைத்தியரை அணுகி, முறைப்படி கண்களைத் தானமாக ஏற்கச் செய்தல் கண்தானம் எனப்படும். டாக்டர் அல்லாத எவரும் சடலத்திலிருந்து கண்களைப் பிரித்தெடுக்கவோ தானம் வழங்கவோ முடியாது.

### எப்பொழுது கண்கள் அகற்றப்படும்?

ஒருவரதுமூளை மரணம் அடைந்து விட்டது என டாக்டரால் உறுதிப்படுத்தப்பட்டு ஆறுமணித்தியாலங்களுக்குள், கண்தானம் செய்தவரது கண்கள் அகற்றப்படும். கண்தானத்தைப் பற்றி அறியாதோர், உயிர் பிரியும் தறுவாயில் கண்கள் அகற்றப்படுவதாகவும், உயிருடன் இருக்கும்போது கண்கள் அகற்றப்படுவதாகவும், தம்மிடையே பேசிக்கொள்கிறார்கள். இது தவறான எண்ணமாகும். ஒருவர் உயிருடன் இருக்கும் போதோ, அல்லது அவரது உயிர் பிரியும் தறுவாயிலோ கண்கள் அகற்றப்படுவதில்லை. மரணம் நிகழ்ந்து 6 மணித்தியாலங்களின் பின் கண்கள் பழுதடைந்து விடுவதால் அதன் பின்பும் கண்கள் அகற்றப்படுவதில்லை

### விளிவெண்படல மாற்றுச் சிகிச்சை எப்போது செய்யப்படும்?

தேமாப் பூ மரம், கள்ளி, பப்பாசி, எருக்கலை போன்ற மரங்களின் பால் கண்ணினுள் சிந்துதல், கொப்புளிப்பான்நோயின் கொப்புளங்கள் விளி வெண்படலத்தில் தோன்றுதல், வெல்டிங் செய்யும்போது தீப்பொறி கண்ணில்படல், கடைச்சல் இயந்திரத்தின் உலோகச் சிராய்கள், கூரான உபகரணங்கள், விபத்துகள் போன்றவற்றால் விளி வெண்படலத்தில் காயம் ஏற்படல், விளி வெண்படலத்தில் அமிலம், காரம், மருந்துகள், பெயின்ற் போன்ற அரிக்கும் தன்மையுள்ள பொருட்கள் தெறித்தல், கண்ணினுள் மண்போன்ற துகள்கள் விழும் பொழுது கண்களைக் கசக்குதல் போன்ற காரணங்களால் விளி வெண்படலத்தில் புண் ஏற்பட்டு விளி வெண்படலம் பால் நிறமாக மாறிவிடும். நோய்களுக்கு உள்ளெடுக்கப்படும். சில மருந்துகளாலும் தெளிவான கண்ணாடிபோல் இருக்கின்ற விளி வெண் படலம் பால் நிறமாக மாறிவிடும். இந் நிலை ஏற்பட்டால், கண்ணினுள் ஒளி புக முடியாது. பார்வை இழப்பு ஏற்பட்டு விடும். இதனை எந்த மருந்தினாலும் குணப்படுத்த முடியாது. அதனை அகற்றிவிட்டு, இறந்த சடலங்களில் நல்ல நிலையிலிருக்கும் விளி வெண்படலத்தைப் பொருத்தியே பார்வை வழங்க முடியும். இச் சந்தர்ப்பத்தில் தான் விளிவெண்படல மாற்றுச் சத்திரசிகிச்சை செய்யப்படும்.

### கண்தான பிரச்சாரத்தின் ஆரம்பம்

பல வருடங்களுக்கு முன்பு, டாக்டர் ஹட்ஸன் சில்வா என்பவர் கொழும்பில் கண்தான நடவடிக்கைகளைஆரம்பித்தார் இதேவேளையில், தாம் உலகத்தின் பிரஜை எனவும்உலக மக்களுக்குத்தன்னாலானசேவையைச் செய்வதாகவும் தெரிவித்து சமூக சேவை பல புரிந்த தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்கள், வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் கண் தானத்தின் மகிமை பற்றிப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். இவர் நாடகங்களையும் சில பிரசுரங்களையும் தமது பிரச்சாரத்திற்குப் பயன் படுத்தினார்.

ஆனால்,இவர் கண்தானப் பிரச்சாரம் ஆரம்பித்த காலத்தில், நாடகத்தின் செல்வாக்கு குறைந்து, சினிமாவின் செல்வாக்கு அதிகரித்துவிட்டது. இதனால், இவரது பிரச்சாரம் எடுபடவில்லை இதன் விளைவு-பார்வையற்ற பலர் எம் மத்தியில் வாழ்கின்றனர். பார்வை வழங்கும் திறனுடைய கண்கள், சடலங்களுடன் எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டும் வீணாகின்றன.

### கண் விளி வெண்படல மாற்றுச் சிகிச்சையின் ஆரம்பம்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் நோயாளிகளைத் தேடிச் சென்று, அரிமா கழகம், றோட்டரிக் கழகம் போன்ற சேவைக்கழகங்களின் உதவியுடன் கண் சிகிச்சை மேற்கொள்ளும் தயாள சிந்தை கொண்ட, கண் சிகிச்சை வல்லுனர்


**ச. ஆ. கோபாலமூர்த்தி**

கூட்டுறவாளர் தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் நினைவுக் குழு செயலாளர்.


டாக்டர் எஸ். குகதாஸன் அவர்களே கண் விளி வெண்படல மாற்றுச் சத்திரசிகிச்சை என்ற அத்தியாயத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்தபெருமைக்கு உரியவர் ஆவார். கண் தானம் பற்றி அவர் தெரிவித்த விபரங்கள் பின்வருமாறு:-

1. ஒருவர் தாம் கண்தானம் செய்வதாக யாழ். போதனா வைத்திய சாலைக்குத் தெரிவிப்பதனால் கண் தானத்தை நிறைவேற்ற முடியாது. யாழ். போதனா வைத்திய சாலையில் இறப்பவர்களது உறவினர்கள், கண் தானம் செய்யும் விருப்பத்தை மரணம் நிகழ்ந்து 6 மணித்தியாலங்களுக்குள் தெரிவித்தால் அல்லது, வாட்டில் சேர்க்கும் போது கண் தான விருப்பைத் தெரிவித்தால் கண்தானம் ஏற்கப்படும்; நிறைவேற்றப்படும்.

(5ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்தானம் பற்றி...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

2. சடலங்களிலிருந்து எடுக்கப்படும் கண்கள் குளிரூட்டியில் வைக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுள் அவற்றின் விளி வெண்படலம் மாத்திரம் பிரித்து எடுக்கப்பட்டு விளி வெண்படலம் பாதிக்கப்பட்டோருக்குப் பொருத்தப்படுகிறது.

3. சடலங்களிலிருந்து கண்களை அகற்றுவதற்குச் சில நிமிடங்களே செலவாகும்.

4. சடலங்களிலிருந்துகண்கள் அகற்றப்பட்ட பின், கண்கள் இருந்த குழிகளுள் கண்களின் பருமனான பஞ்சு உருண்டைகள் வைக்கப்பட்டுக், கண் இமைகள் முறைப்படி மூடப்பட்ட பின்னரே சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்படும். இதனால், மூகத்தில் கண்கள் அகற்றப்பட்ட அடையாளம் எதுவும் தெரியாது.

5. இறந்தவரின் இரத்தம் உறைந்திருக்கும். எனவே, கண்களை அகற்றும்போதோ அல்லது அதன்பின்னரோ இரத்தம் வெளியேறாது.

6. அபரக் கிரிகையின் போது குளிப்பாட்டுவதற்கு எவ்வித இடைஞ்சலும் இருக்காது.

7. சாதாரண காயத்துடன் இறந்த ஒருவரது சடலம் கெடாது இருக்கும் கால அளவிற்குக், கண் அகற்றப்பட்ட சடலமும் கெடாது இருக்கும். விரைவில் தகனம் செய்தல் வரவேற்கத் தக்கது.

8. சிறுவர்களது கண்கள் சிறியவையாக இருப்பதால் அவற்றைச் சிறுவர்களுக்கு மாத்திரமே பொருத்த முடியும். விளி வெண்படலம் பாதிக்கப்பட்டவர்களில் அனேகர் பெரியவர்களாகவே இருப்பதால் 10 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரதும் கண்கள் தானத்திற்கு ஏற்கப்படுகின்றன. மிகு முதுமை அடைந்தவர்களது கண்களும், விளி வெண்படலம் நல்ல நிலையில் இருக்குமாயின் தானத்திற்கு ஏற்கப்படுகின்றன,

9. கண்ணின் உள்ளே இருக்கின்ற வில்லை ஒளி புகவிடும் தன்மையை இழப்பதாலேயே '' கற்றறாக்ற் '' எனப்படும் கண் புரை நோய் ஏற்படுகிறது. இதன் காரணமாகப் பார்வையற்றிருப்பவர்களதும், இதற்காகச் சத்திரசிகிச்சை செய்தவர்களதும் விளி வெண்படலம் நல்ல நிலையில் இருக்குமாயின் அவையும் தானத்திற்கு ஏற்கப்படுகின்றன.

10. விளி வெண்படலம் பாதிக்கப்பட்டவர்கள், காசநோய், புற்றுநோய், பாலியல் நோய்கள், எயிட்ஸ், செப்ரிசீமியா, போலியோ, கொப்புளிப்பான், பாம்புக்கடி, நஞ்சு அருந்துதல், அல்லது நஞ்சுத் தொடுகை ஏற்படல், விசர் விலங்குகள் கடித்தல், மூளைக் காய்ச்சல் தொற்றும் செங்கண்மாரி, மோசமான எரிகாயங்கள் போன்ற காரணங்களால் இறந்தவர்களது கண்கள் தானத்திற்கு ஏற்கப்படுவதில்லை.

இறந்த உறவினர்களது கண்கள் இன்னொருவரது உடலில் உயிர் வாழ்ந்து அவருக்குப் பார்வை நல்கி அவரை மகிழ்விப்பதைக் கண்டு நீங்களும் மகிழ விரும்பினால், உங்கள் உறவினர்கள் இறக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களது சடலங்களிலுள்ள கண்களைத் தானம் செய்யுங்கள்!

இருபதாம் நூற்றாண்டில் பிறரிடம் எதையாவது வாங்குவதில் மகிழ்ச்சியடைந்த நாம், இருபத்தோராம் நூற்றாண்டிலாவது பிறருக்கு எதையாவது கொடுப்பதில் மகிழ்ச்சியடையும் அத்தியாயத்தை ஆரம்பிப்போமாக!

## தைபோயிட்

☆ இந்நோயுள்ளவரின் மலத்துடனும், சிறுநீருடனும், வெளியேறும் பக்ரீறியங்கள் உணவின் மூலமும், நீரின் மூலமும், சுகதேகிகளின் உடலை அடைகின்றன.

☆ பக்ரீறியங்கள் உடலில் நுழைந்து 10-14 நாள்களின்பின்பேநோய்க்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்குகின்றன. இந் நோய்க் கிருமிகள் தொற்றும் அனைவரும் நோயாளிகளாக மாறிவிடுவதில்லை. பலர் அவர்களுக்குத் தெரியாமலேயே இந்நோய்க் கிருமிகளின் காவிசளாகி விடுகின்றனர்.

☆ இந்நோயின் அறிகுறியாக காய்ச்சல், தலையிடி, களைப்புத் தன்மை. கை, கால்களில் நோ' இருமல், மலச்சிக்கல் போன்றவை காணப்படும்.

நன்றி. நங்கூரம்

## உங்களை நாய் கடித்தால்...

1 நாய் எது என்பதை உடனடியாக இனம் காண முயற்சியுங்கள்.

2 கடித்தநாயினைஇனம்காண முடியாவிட்டாலோ, அல்லது அது வெறி நாயாக இருந்தாலோ உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும். உங்களுக்கு விசர்நாய்க் கடி நோய்த் தடுப்பு ஊசி தேவை.

3 நாய் உங்களுக்கு தெரிந்த நாய் எனின் நீங்கள் செய்ய வேண்டியது மூன்று விடயங்கள்:

3.1 நாய் கடித்த இடத்தை சவர்க்காரம் அல்லது டெட்டோல் கலந்த நீரால் கழுவவும்.

3.2 அண்மையில் ஏற்பு ஊசி எடுக்காவிடின் ஏற்பூசிபோட்டுக் கொள்ளலாம்.

3.3 உங்களைக் கடித்தநாயினை 10 நாட்களிற்குக் கவனமாக அவதானிக்கவும்

4. இரண்டு கிழமைக்குள் உங்களைக் கடித்தநாய் திடீரென்று இறந்துபோனாலோ வெறிநாய்களுக்குரிய அறிகுறிகள் தோன்றினாலோ, அல்லது அவதானிக்க முடியாதவகையில் நாய் தப்பிச் சென்று விட்டாலோ உடனடியாக வைத்திய ஆலோசனையை நாடவும் உங்களுக்கும் வெறி நாய் கடிநோய் தடுப்பு ஊசி தேவை

5. மேற்குறிப்பிட்ட எதுவும் ஏற்படாமல் நாய் இரண்டு கிழமைகள் உயிருடன் இருந்தால் அது நல்ல (வெறியற்ற) நாய் என்று நீங்கள் நிம்மதியடையலாம் ஆறுகிழமையில் இரண்டாவது ஏற்பூசியை போட மறந்து விடாதீர்கள். - சுகமஞ்சரி

## செய்து பாருங்கள்...

வாழைப்பூவை பருப்புடன் சேர்த்து சமைத்து உண்டால் கை, கால் எரிவு இல்லாமல் போவதுடன் சோம்பல் தன்மையும் நீங்கும்.

# முகாமையியல் சூழலும் சமூகப்பொறுப்பும்.

## Environment And Social Responsibility in Management.

இன்று விரைவான மாற்றத்திற்கும் துரித வளர்ச்சிக்கும் உட்படும் வர்த்தக உலகத்தினை திறமையான முறையில் வழி நடாத்தி செல்வதற்கானமுக்கிய துறைகளுள் அனைவராலும் வேண்டப்படுகின்ற ஒரு துறையாக முகாமை விளங்குகின்றது. இலக்குகளை சரியாக முன்வைத்து அதை சரியான முறையில் நேரத்தில் அடைவதற்கான செயற்பாடுகளையும் மனித வளங்களையும் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி வழிநடாத்தி கட்டுப்படுத்தல் மூலமாக வினைத்திறமையுடன் கூடிய முடிவுகளை அடைய திறனான முகாமை வேண்டப்படுகிறது. முன்வைக்கப்பட்ட இலக்குகளை உரியமுறையில் அடைதல் என்பதன் மூலம் நிறுவனங்களின் திறனான முகாமையை அளவிடமுடியும் ஆயினும் முன்வைக்கப்பட்ட இலக்குகள் எத்தன்மை வாய்ந்தவை என்பதைப் பொறுத்தே திறனான முகாமை உள்ளதா என்பதை நாம் வரையறுக்கமுடியும்

இலக்குகள் யாவும் நிறுவனத்தினையும், அதன் இலாபத்தன்மையையும் உயர்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருப்பின் அத்தகைய இலக்கை அடைந்தமையைக்கொண்டு முகாமையானது முழுமையான வெற்றியை அடைந்தது எனக் கூறமுடியாது. ஏனெனில் நிறுவனத்தில் முழுமையான வெற்றிக்கு தனித்து நிறுவன நலன்களை மட்டும் கருத்திற்கொண்ட இலக்குகள் காரணமாகிவிட முடியாது நிறுவனத்தின் சூழலும் சூழல் மீது நிறுவனம் கொண்டுள்ள சமூகப் பொறுப்புக்களின் அளவிலும் அந்நிறுவனத்தின் நிகழ்கால, எதிர்கால போக்குகள், வளர்ச்சிகள், வெற்றிகள் தங்கி உள்ளன. எனவே திறனான முகாமையும் அதனூடான நிறுவனத்தின் முழுமையான வெற்றியும் நிறுவன நலனையும், சூழல் நலனையும் பேணும் வகையிலான சமூகப் பொறுப்புக்களையும் உளளடக்கிய இலக்குகளை அடைதல் மூலமே அடையப்படமுடியும் இதன் காரணத்தினாலேயே முகாமையியல் சூழல் மீதான சமூகப் பொறுப்புக்களின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. எனவே சூழல் சமூகப்பொறுப்புக்கள் என்பவைக்கு அதிக அழுத்தம் கொடுப்பதாக இக்கட்டுரை தொடர்கிறது.

### சூழல் - Environment

ஒருநிறுவனத்திற்கு வெளியே இருக்கின்றதும் அந் நிறுவனத்தினது செயலாற்றத்தினை (Performance) பாதிக்கின்றதுமான ஸ்தாபனங்களும் (Institutions) சக்திகளும் (Forces) சூழல் எனப்படுகிறது. இத்தகய சூழலை உட்சூழல் (Internal Environment) வெளிச்சூழல் அல்லது புறச்சூழல் (External Environment) என இரண்டுவகையாக நோக்கலாம் ஒரு நிறுவனத்தின் உட்சூழல் ஆனது நிறுவனக் கலாச்சாரம் (Organization culture) எனவும், புறச்சூழல் ஆனது நிறுவனச் சூழல் (Organization Environment) எனவும் அழைக்கப்படுகிறது.

நிறுவனக்கலாச்சாரம் எனப்படுவது பொறுப்புக்களினளவு, நேரடி மேற்பார்வையினளவு, தனிநபர்சுதந்திரத்தினளவு, நிறுவனத்தினளவு நிறுவனத்திலுள்ள தனிநபர்களுக்கான முன்னெடுத்துச் செல்லலுக்கான (Initiative) சந்தர்ப்பம் சட்டதிட்டங்களினளவு முகாமையாளரது ஊழியர்களுக்கான ஆதரவினளவு (Degree of Support) செயலாற்றத்திற்கான வெகுமதி என்பனபோன்ற பல்வேறு விடயங்களைக் குறித்து நிற்கிறது.

நிறுவனச்சூழலானது பொதுச் சூழல் (General Environment) பிரத்தியேகமான சூழல் (Specific Envirnment) என இருவகையாக நோக்கப்படுகிறது.

பொதுச்சூழல் எனப்படுவது நிறுவனத்திற்கு வெளியே உள்ள ஒவ்வொன்றையும் உள்ளடக்குகின்றது இவை அரசியல் (Polittcal) பொருளாதார (Economic) சமூக (Social) தொழில்நுட்ப (Technoligical) காரணிகளென நான்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பொதுச்சூழல் காரணிகள் அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவானவை.

பிரத்தியேகமான சூழல் என்பது நிறுவனம் தனது நோக்கத்தினை அடைவதுடன் நேரடியாகத் தொடர்புடைய சூழல் காரணிகளைக்குறித்து நிற்கின்றது. அரசாங்கம் (Government) வினியோகஸ்தர்கள் அல்லது வளங்குனர்கள் (Suppliers) நுகர்வோர்கள் (Customers) போட்டியாளர்கள் (Competitiors) பொதுமக்கள் அழுத்தக்குழுக்கள் (Publicressum groups) என்பவை ஒரு நிறுவனத்தின் பிரத்தியேகசூழல் காரணிகளாகும்.

நிறுவனத்தின் சூழல் என்பது இவ்வாறு பல்வேறுபட்ட காரணிகளைக் கொண்டதொன்றாகக் காணப்படும் போது இக் காரணிகளைப் புறக்கணித்த அல்லது முக்கியப்படுத்தாத நிறுவன இலக்குகள் செயற்பாடுகள் குறுங்காலத்தில் திறமையாக காணப்படினும் நீண்டகாலத்தில் பல பாராதூரமான விளைவுகளையே தரும். இதை தவிர்க்கும் முகமாகவே சூழல் காரணிகளை கருத்திற்கொண்டு அவை மீதிலான பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அதிக அக்கறை செலுத்தப்படுகிறது.

### சமூகப்பொறுப்புக்கள்
### (Social Responsibility)

பேராசிரியர் கீத்டேவிஸ் (Prof keith Davis) என்பவர் சமூகப் பொறுப்பு என்பதனை பின்வருமாறு விபரிக்கின்றார். ஒரு நிறுவனம் ஏற்றுக்கொண்ட சட்டத்தேவைகளுக்கு அப்பாலுள்ள சமூகக்கடமைப்பாடே சமூகப்பொறுப்பு எனப்படுகிறது.

சட்டத்திற்குக்கட்டுப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் சமூகப் பொறுப்பிற்கு உட்பட்டவையல்லமாறாக ஒரு நிறுவனத்தினது பொருளாதார சட்ட, தொழில் நுட்பத் தேவைகளுக்கு அப்பாலான பிரச்சினைகளுக்கே முகாமையாளர் சமூகப் பொறுப்பினை உடையவராக விளங்குவார்.

தன்னுடைய நீடித்தவாழ்விற்காக ஒரு நிறுவனம் சூழலில் தங்கி இருக்கின்றது. வினியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் சாதகமான அரசியல் பொளாதார சமூகக்காரணிகளில்லாமல் நிறுவனங்கள் வாழ முடியது தொழில் என்பது சமூக ஆற்றலின் ஒருபெரிய வடிவமாகவே சமூகத்திலுள்ளது. பெருமளவிலான

(7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலைக்கழக முகமைத்துவ மாணவர் மன்றத்தினரின் முகாமைநோக்கு சஞ்சிகையில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை தற்காலிக விரிவுரையாளர் செல்வி பிறேமகலா நவரட்ணம் எழுதிய ''முகாமையியல் சூழலும் சமூகப் பொறுப்பும்'' என்னும் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இந்நிறுவனங்களிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றனர். நிறுவனங்கள் வேலைவாய்ப்பினையளித்தல், பயிற்சியளித்தல், சூழல்மாசடைதலைக் குறைத்தல் போன்ற சமூகக்கட்டுப்பாடுகளுக்காக சூழலால் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாறு எதிர்பார்க்கப்படும் சமூகப் பொறுப்பினை ஒரு நிறுவனம் ஐந்து பிரதானதுறைகளில் கொண்டுள்ளது. பங்குதாரர்கள் (Share holders) வாடிக்கையாளர்கள், (Customers) ஊழியர்கள், (Employees) சமூகம், (Society) வினியோகஸ்தர்கள் (Suppliers) என்ற ஐந்திலேயும நிறுவனமானது சமூகப் பொறுப்பினைக் காண்டுள்ளது இலாபம் உழைத்ததுடன் இவ் ஐந்து துறைகளையும் கருத்திற்கொண்டு அவற்றின் மீதான நிறுவனத்துக்குரிய கடமைகளையும் நிறைவேற்றப்படுதல் மூலம் முழுமையான பொறுப்புக்களை நிறுவனம் நிறைவேற்றியதாகின்றது தொழில் நிறுவனங்களும், ஏனைய நிறுவனங்களும் நீடித்து வாழ்வதற்காக சமூகத்தினது தேவைகளைச் சந்திக்கவேண்டியிருக்கின்றது. நிறுவனம் சமூகத்தினது தேவைகட்கு ஒத்துணர்வற்றதாக இருக்குமானால் அது பொது மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்கின்ற ஆதரவினையும் சக்தியையும் இழந்துவிடும்.

### சமூகப் பொறுப்பு மீதான விவாதங்கள்

### ( Arguments on Social Resperisibility )

நிறுவனம் சமூகப்பொறுப்பினைக் கொண்டிருக்கவேண்டுமா? என்பதனைப்பற்றி சார்பாகவும், எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையே சமூகப்பொறுப்பு மீதான விவாதங்களாக அமைகின்றன.

சமூகப் பொறுப்பிற்கு சார்பாக கூறிய கருத்துக்களை, முதலில்நோக்குவோம். நிறுவனம் தவிர்க்க முடியாத வகையில் சமூகப் பிரச்சனைகளில் நெருங்கியதொடர்புடையதாக இருக்கின்றது. அத்துடன் இன்றைய சிக்கலான சமூகப் பிரச்சனைகளை எதிர்த்து போராடுவதற்கு நிறுவனத்திடம் போதிய வளங்களுண்டு. சமூகத்துடனான கூட்டு நடவடிக்கைகள் அரசாங்கத்தினது தலையீட்டைத் தடுப்பதுடன், அரசாங்கத்தினது ஒழுங்கு விதிகளை (Govt: Regulations) தவிர்ப்பதற்கும் உதவுகிறது. சமூகத்தினோடு நிறுவனம் நெருங்கிய தொடர்புடையதாக இருக்குமானால் பிரச்சனைகளை இலாபகரமாக்க முடியும். சமூக கலாச்சார வடிவங்கள் சமூகப் பொறுப்பினை வேண்டி நிற்பதால் நிறுவனம் தொழிலைமேற்கொள்ளும். சமூகத்தினை மேம்படுத்துவதற்கும், உயர்த்துவதற்குமான நிறுவனத்தின் நீண்டகால ஆர்வத்தில் சமூகப் பொறுப்பு இருக்கின்றது. ஒரு நல்ல சமூகமே வியாபாரம் செய்வதற்கான நல்ல சூழலாகக்கருதப்படுகிறது சமூகப் பொறுப்பானது நிறுவனத்தினது சமூக மதிப்பினை (Social Image) மேம்படுத்துகின்றது.

## முகாமையியல்

சமூகப் பொறுப்பினை நிறுவனம் கொண்டிருக்கும் போது அதனை நிறைவேற்றும் போதும் தொழிலாற்றக்கூடிய தன்மை அதிகரிக்கும். அத்துடன் நிறுவனமானது சமூகத்திற்கு அனுகூலங்களைக் கொடுப்பதன் காரணமாக அது நீடித்துவாழும். ஏனெனில் நிறுவனம் சமூகப் பொறுப்பினைப் பேணுவதனால் சமூகம் தனது அதிகார சாசனத்தை மாற்றிவிடமுடியும். நிறுவனம் சமூகப் பொறுப்பினைப் பேணுவதினால் அது எதிர்நோக்க வேண்டிய ஆபத்துக்கள் குறைவாக இருக்கும். இதனால் நீண்ட காலத்தில் நிறுவனத்தின் பங்குகளின் விலை உயர்வடையும். சட்டங்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அமுல்படுத்தப்படமுடியாது. இவ்விதம் சட்டரீதியான சமூகத்தினைப் பேணிக் கொள்வதற்கு நிறுவனம் சமூகப் பொறுப்பினைக் கொண்டிருக்கவேண்டும்.

இவ்வாறு நிறுவனத்தின் பொறுப்புக்களில் முக்கியமானதும் நிறைவேற்றப்படவேண்டியதுமான சமூகப் பொறுப்பு எனக்கருத்துக்கள் பல முன்வைக்கப்படுகின்றது. அதேசமயம் சமூகப் பொறுப்பு முக்கியமானதல்ல எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது.

இலாப உச்சப்படுத்தலானது திறமையான பயன்பாட்டை உறுதி செய்கின்றது. ஆனால் சமூகப்பொறுப்பானது இலாப உச்சப்படுத்தல் நோக்கத்தினை மீறுகின்றது. நிறுவனத்தின் அடிப்படை நோக்கத்தினை சமூகப் பொறுப்பு பலவீனப் படுத்தும். சமூகப் பொறுப்பினை பேணுவதற்கான செலவு மிகவும் உயர்வாகஇருப்பதன் காரணமாக நிறுவனத்தினது பண்டங்களின் விலைகளை மிகவும் அதிகரிக்கும்; தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குவதற்கும், நீடித்திருப்பதற்கு மென ஒரு இலபத்தினைப் பேணவேண்டும். ஆனால் சமூக நோக்கங்களிற்கான செலவுகள் பல நிறுவனங்களது எதிர்காலத்தை ஆபத்துக்குள்ளாக்கும். அத்துடன் சமூக வெளியீடுகள் (Social Outputs) உடனடியான ஒரு பொருளாதார விளைவை அளிப்பதுமில்லை எனவே இவ்வாறு ஏற்படும், நிர்ப்பந்திக்கப்படும் செலவுகள் நிறுவனத்தினது உற்பத்தி செலவை அதிகரிப்பதனூடாக பொருட்கள், சேவைகளது விலைகளை உயர்த்தவேண்டி நிர்ப்பந்திக்கின்றது: இதனால் கேள்வி குறைவடைய வழிவகுக்கின்றது.

சமூக இலக்குகளை அனுசரிப்பதற்கு நிறுவனத்திற்கு ஆற்றல் தேவைப்படுகின்றது. இதனால் முகாமையாளர்கள் தமது கவனத்தை பொருளாதார இலக்குகளில் இருந்து திருப்ப வேண்டி இருப்பதினால் திறயின்மை ( Inefficiency ) ஏற்படமுடியும். நிறுவனங்களுக்கு சமூகப் பொறுப்பு உண்டென்று கருதினாற்கூட சமூகத் தீர்மானங்களை (Social decissions) மேற்கொள்ட நிறுவனத்திலுள்ளவர்கள் பயிற்றப்பட்டவர்களாகவோ தகுதியுடையவர்களாகவோ இருப்பதில்லை. எனவே சமூகப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான சமூக நுட்பம் ( Social Skill ) நிறுவனத்திடம் பற்றாக்குறையாக உள்ளது. நிறுவனத்திற்கு ஏற்கனவே போதியளவான வலு உண்டு இவ்வாறு இருக்கும் போது மேலதிகமாக சமூக ஆற்றலின் மீது கவன செலுத்துவது விருப்பத்தக்கதல்ல கூடுதலான சமூகப்பொறுப்பு ஒரு நிறுவனத்தினது வலுவை அதிகரித்து ஒரு தனி உரிமை நிலையைஏற்படுத்திவிடலாம். இது ஓர் சமநிலை அற்ற தன்மையை

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்பில் வேம்பின்..

3ப க தொடர்ச்சி

பரப்பளவில் பண்ணையைச் சுற்றி வர வேப்ப மரங்களை நாட்டி சிறு தானியப்பயிர்கள் பயிரிட்ட போது 23 வீதமான விளைவு அதிகமாகக் கிடைப்பதை கண்டறிந்துள்ளனர். நாட்டிய வேப்பமரங்கள் பெரிதாக வளரும் வரை வீணாகும் நிலப்பரப்பில் ஊடுபயிர்கள் செய்கிறார்கள். இதே போன்று நைஜீரியா நாட்டிலும் காற்றுத் தடையாக வேப்ப மரங்கள் நாட்டிப் பயன்பெறுகிறார்கள்.

பெரும் மணல் வெளிநிலப்பரப்புகளை அடுத்துள்ள நன்நிலங்களில் கோடை காலத்தில் காற்று வேகமாக வீசும் போது மணல், மண் காற்றினால் உப்பு மண் அள்ளி வரப்பட்டு வீசப்படுகின்றது. இதே போன்று யாழ்ப்பாணக் கடலேரிகள் கோடை காலத்தில் நீர் வற்றிப்போகும்போது காற்றினால் உப்பு மண் அள்ளி வரப்பட்டு நன்நிலங்களின் மேல் விசிறப்படுவதினால் பயிர்ச்செய்கை நன்நிலங்களில் உப்புத்தன்மை அதிகரித்து பயிர் செய்ய முடியாத நிலை உருவாகிறது. நன்நிலங்கள் உவர் சவர் நிலங்களாகவும் மாறுகின்றன. பெரிய வெளிகளை அடுத்து வரும் எல்லைகளில் வேப்பமரங்களை வரிசையாக நடுவதன் மூலம் காற்றினால் ஓர் இடத்திலிருந்து மண் இன்னோர் இடத்திற்கு எடுத்துச் செல்வது தடுக்கப்படுகிறது. சில வேளைகளில் பயிர்ச் செய்கை நிலங்களிலுள்ள மேல் மண்ணை காற்று அடித்துச் செல்வதனால் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமல் இருக்கலாம் இப்படியான இடங்களை சுற்றி வேப்ப மரங்களை நடுவதன் மூலம் நன்மண் அள்ளிச் செல்லப்படுவதைத் தடுக்கலாம்.

காற்றினால் மண் அரித்துச் செல்லப்படுவது போன்று மழை நீரினாலும் அரித்துச் செல்லப்படுகின்றது. குறிப்பாக சரிவான நிலங்களில் மண் அரித்துச்செல்லப்படும் வேகம் அதிகமாக இருக்கும். நன் நிலங்களில் உள்ள பசளைத்தன்மை செறிந்த மேல்மண் அரித்துச்செல்லப்படும்போது அந்நிலம் பயிர்ச்செய்கைக்கு பயன் குறைந்ததாகவே இருக்கும். சிலவேளைகளில் நன்நிலத்தில் வேறு இடங்களிலுள்ள மணல் மண்ணை அல்லது பசளைத் தன்மை அற்ற மண்ணோ அல்லது உப்பு மண்ணோ கொண்டுவரப்பட்டு மூடியிருக்கும். மழை நீரினால் மண் எடுத்துச்செல்லப்படுவதை வேப்பம் மரத்தின் பரந்த வேர்த்தொகுதிகள் தடுத்துக் கொள்கின்றது. வேப்பமரம் சடைத்து வளரும் இயல்புடையதால் மழை நீரின் வேகத்தைக்குறைத்து மண் அரித்துச் செல்வதைத் தடுத்துக் கொள்கின்றது.

மரமற்ற பரந்த வெளிகள் எமது பிரதேசத்தில் ஏறக்குறைய அரைப் பகுதிகளாகவுள்ளன. இப்பகுதிகளில் பெய்யும் மழைநீர் வடிந்தோடிக் கடலை அடைகின்றது. இந்நீரை வடிந்தோடாமல் நிலத்தினுள் செலுத்த வேண்டுமாயின் வேப்பமரங்களை வளர்க்க வேண்டும். நிலத்தில் சேருகின்ற நிலத்தடி நீரையே கிணறுகள் மூலம் பெறுகின்றோம். நிலத்தில் சேரும் நீரின் அளவு குறையும் போது கிணற்றுநீரின் அளவு குறைவதுடன நீர் உவர்த்தன்மையாகவும் மாற்றமடையலாம்.

மரம் இல்லாத வெளியான இடங்களில் கோடை காலத்தில் நிலம் நன்கு வெப்பமடைகிறது. காற்று வீசும்போது நிலத்திலுள்ள வெப்பம் இக்காற்றுடன் கலந்து வீசுகின்றது. இக்காற்று அனல் காற்று என அழைக்கப்படும். இக்காற்றானது பயிர்களின் மேல் வீசும் போது பயிர்கள் காய்கின்றன. இப்படியான இடங்களில் நீர் இறைத்தாலும் விரைவில் நீர் காய்ந்துவிடும். எனவே வெளியான நிலங்கள், தரிசான நிலங்கள் கவனிப்பாரற்ற நிலங்கள், கட்ட ந்தரை நிலங்கள், போன்ற இடங்களில் வேம்பை வளர்ப்பதன் மூலம் மண்ணில் நீர் கொள்ளும் அளவு கூடுவதினால் கிணறுகளிலும் நீர் மட்டம் உயர்வதுடன் உவர்த்தன்மையும் ஏற்படாது பயிர்களை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து வேப்பமரம் பாதுகாக்கின்றது. வேப்பமரம் உயர்ந்து சடைத்து வளர்வதால் வெளியான இடங்களில் வளர்க்கும் போது மழை பெய்யும் அளவு கூடுகின்றது.

---

## வேப்பம் விதை

வேப்பம் பருப்பு நைதரசனைப் பிடித்து வைத்திருக்கும் இயல்புடையது. மேட்டுநிலங்களுக்கு ஒரு கிலோ வேப்பம் விதையை இடித்து 0கிலோ யூரியாவுடன் கலந்து பயிர்களுக்கிட்டால் யூரியா நீண்ட நாட் ளிற்கு நிறுத்திவைக்கப்பட்டு பயிர்களினால் பயன்படுத்தப்படும். வேப்பம்பிண்ணாக்கிற்குப் பதிலாக வேப்பம் விதையை இடித்து நைதரசன் உரப் பசளையுடன் சேர்த்து பாவித்து விவசாயிகள் பயன் பெறலாம்.

---

## ஆபத்தான விற்பனை!

உயிருடன் இருப்பவர்கள் தங்களது உடல்உறுப்புக்களை சட்ட விரோதமாகத் தானம் செய்து வருகிறார்கள் இந்தியாவில் வருடந்தோறும் 400 கோடிரூபா மதிப்பு வாய்ந்த உடல்உறுப்புக்கள் விற்பனை செய்யப்படுகிறதாம்!

| | |
|---|---|
| ☆ கல்லீரல் | 40,900 ரூபா |
| ☆ சிறுநீரகம் | 75,000 ரூபா |
| ☆ கண் | 50,000 ரூபா |
| ☆ தோல் | 8,000 ரூபா |
| ☆ மனித எலும்புக்கூடு | 10,000 ரூபா |

## எச்சரிக்கை

இவ்வுடல் உறுப்புக்களை விற்போருக்கும், வாங்கிப் பொருத்துவோருக்கும் ஓர் எச்சரிக்கை-உறுப்புக்களை சரியான சிகிச்சையில் தானம் செய்வோர் உயிருக்கு ஆபத்தும், மாற்றுஉறுப்பு பெறுவோர் அவ்வுறுப்பின் ''திசுக்கள்'' பொருத்தமில்லாது போனால் அவரது உயிருக்கும் ஆபத்து ஏற்படும்.

☆ ☆ ☆

## வீடு தேடிவரும் வழக்கும் தண்டமும்

சுவீடனில் உள்ள தெருக்களில் போக்குவரத்து விதிகளை மீறினால் உடனடியாக தண்டம் விதிக்கப்படுவதில்லை. போக்குவரத்து விதிகளை மீறும் வாகனங்கள் தன்னிச்சையாகவே புகைப்படம் பிடிக்கப்பட்டு புகைபடமும், தண்டப்பணக்கட்டளையும் வீடுதேடி வந்துவிடும். வழக்குத் தொடர்வதும் தண்டப்பணம் செலுத்துவதும் பின்னர்தான் நடக்கும்.

### வர வேற்கிறோம்

கூட்டுறவாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை கவிதை, பொது அறிவு விடயங்களை எதிர் பார்க்கிறோம், எழுதும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி

ஆசிரியர் ஐக்கியதீபம்
யாழ்மாவட்டக்கூட்டுறவுச் சபை
இல 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆடல் அரங்கின் பன்முக வளர்ச்சி

ஆடல்களின் ஒரு பிரதான இயல்பு அதன் பன்முக [ Multiple ] வளர்ச்சியாகும். வாழ்க்கைக்கோலங் களின் பன்முகப்பாங்கு, புவியியல் சார்ந்த பன்முகப்பாங்கு, அறிகை சார்ந்த பன்முகப்பாங்கு முதலியவை ஆடல் வடிவங்களிலும் வேறுபாடு களை ஏற்படுத்தி வருகின்றன. ஒரே ஆடல் வடிவத்திலும் வேறுவேறு பட்ட பாணிகள்தோன்றுதல் தவிர்க்க முடியாததாகின்றது. சமூக அடுக்க மைப்பில் மேலோங்கியவர்கள் இந்தி யக் கலைமரபில் பன்முகப்பாடுகளைத் தவிர்த்து ஒருமைப்பாடுகளை ஏற்ப டுத்த முயன்றனர் நாட்டிய சாஸ்தி ரம் ஒரு வகையில் இந்தப்பணி யையே செய்ய முற்படுகின்றது.

கலைகளைநித்தியமான பொருள் களாகக் காட்டுதல், அடிப்படை யான ரசங்களுடனும், கரணங்களு டனும் அவற்றைத் தொடர்புபடுத் துதல் முதலிய ஒருமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டாலும், வேறுபாடுகளும், பன்முகப் பாங்குகளும் வலாயின அத்தகைய வேறுபாடுகளை ''தேசிஇராகம்'' ''தேசிகரணம்'' முதலிய தொடர் களால் அழைத்தனர். மேலோங்கி யோர் தமது ஆடல்களை ''சாஸ்திர கிரக'' என்ற தொடராலும் அழைத் தனர். சாஸ்திரங்களில் இருந்து விடு பட்டவை ''லோககிரக'' எனவும் அழைக்கப்படலாயிற்று

ஆடல் என்பது உடல் வழித் தொடர்பூட்டலை அடிப்படையாகக் கொண்டது. தொழில் நிலை வேறு பாடுகளுக்கேற்ப உடலசைவுகளும் வேறுபட்டுக் காணப்பட்டன. சமூக அடுக்கமைப்பில் உயர்ந்தோர் கடின உடலுழைப்பை வழங்காதவர்களாயி ருந்தனர். கடின உடலசைவுகள் உழைக்கும் மாந்தரின் வாழ்க்கையு டன் தொடர்புபட்டிருந்தன. இத னால் மேட்டுக் குடியினரின் ஆடல் களில் பாரிய உடலசைவுகளைக் காட் டிலும், முகபாவ வெளிப்பாடுகளே ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தன. இவை நுண்அசைவுகள் ( MicroMove ments ) என்று குறிப்பிடப்படும்.

கேரளத்திலே சிறப்புப்பெற்றகுதி யாட்டத்தைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது ஆடல் பன்முகப் பாங்குகளை ஒன்றிணைத்த அகல் விரி பண்பு கொண்டதாக முகிழ்தமை யைக் காணலாம். அதனைப் பின் வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

1 அருவமான அசைவுகள் இடம் பெறல்.

2 கதகளி நடனத்தோடிணைந்த மண்டலாசனமும், தீவிர அசை வுகளும் இடம்பெறல்.

3 சொல்லோடிசைந்த முழு உடல சைவுகளும் காணப்படல்.

4 இணக்கிய ஆடல் வகைகளும் ஒரே எண்ணக்கருவுக்குப் பல வகை ஆடற் கற்பனைகளைத் தருதலும்;

5 முகத்தசை நார்களை நுண்மை யாக இயக்குதல்.

6 கிராமிய சடங்கு முறைகளை ஒன்றிணைத்தல்.

## ஆடலரங்கு

### கேரளத்தின் குதியாட்டம்

மேட்டுக்குதியினருக்குரிய மெது வான அசைவுகளையும் கடுமையாக உழைக்கும் மாந்தருக்குரிய கடின உடலசைவுகளையும் உள்ளடக்கிய அகல்விரி ஆக்கமாக தொகுக்கப்பட் டமையைக் காணலாம். மேலும் சமஸ்கிருத தொல்சீர் அரங்குக்குரிய பண்புகளும், கிராமிய ஆடற்பாங்கு களும் இதில் இணைந்துள்ளன

தமிழகத்திலும், கேரளத்திலும் காணப்படும் பன்முகப்பட்ட ஆடல் வகைகள் வேறுபட்ட கோலங்களை யும் தெளிவுபடுத்தும், சதிர்நடனம், யக்சகானம், பகவதமேளம், குறவஞ்சி, தெருக்கூத்து, கும்மி, கரகம், காவடி கோலாட்டம், குதிரையாட்டம், போன்ற பல்வேறு ஆடல் வடிவங் கள் தமிழகத்திலே காணப்படு கின்றன. அஸ்டபதி, கிருஷ்ணாட் டம், கதகளி, ஊற்றன்துள்ளல், கைகொட்டிக்களி, தெய்யம், கோலம் முதலாம் பன்முகப்பாங்கான ஆடல் வடிவங்கள் கேரளத்திலே காணப் படுகின்றன.

இந்தியாவின் கிழக்குப் பிரதே சங்களிற் காணப்படும் ''சௌ'' ஆடலை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அது சமூகத்தின் அடித்தள மக்களின் கலைவடிவமாக அமைந்த துடன் பன்முக வளர்ச்சிக்கோலங்க ளைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. 'சௌ' என்பது 'சாய' எனப்படும் நிழல் என்ற எண்ணக்கரு விலிருந்து தோன்றியதென்று நடன ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுகின் றனர்; வேட்டையாடற் பண்புகளு டன் இணைந்ததாக இந்த ஆடல் தோன்றியதென்ற கருத்தும் உண்டு. ஒறியா பேச்சு மொழியிலிருந்து இந் தக் கருத்து முன்மொழியப்பட்டுள் ளது. போராடும் எண்ணக்கருவை 'சௌ' புலப்படுத்துகின்ற. தென்ற பிறிதொரு விளக்கமும் உண்டு திபெத் திய மொழியில் 'சம்' என்பது முக மூடியைக் குறித்து நிற்கும். அதிலி ருந்தே 'சௌ' என்ற ஆடல் எண் ணக்கரு வளர்ந்ததென்று கருதுவோரு முளர். மாறு வேடம் அணிதல் வெறுப்புணர்வை வெளிப்படுத்துதல், என்றகருத்துக்களில் சமஸ்கிருத நூல் வல்லார்கள் இந்த ஆடலுக்கு விளக் கம் தருவர்.

சமூகத்தின் அடிதள மக்களின் போர்குணவியல்புகளைக் காட்டும் இந் நடனம் இயல்பாகவே பன்முக மான வளர்ச்சிப்பண்புகளைக் கொண் டது. செராய் கல சௌ, மயூர் பான் ஜேசௌ, புறுலியா சௌ, என்ற வாறன பெரும் பிரிவுகளும் தனித் தனி வேறுபாடுகளும் காணப்படுகின் றன.

மக்கள் வாழ்க்கை முறைமைக ளும், சமூகக் கோலங்களும் அடித்தள மக்களிடத்து முறைசார் கல்வி வாயி லாக ஒழுங்கமைக்கப்படாதிருக்கும் நிலையானது ஆடற் கோலங்களிலும் பன்முகப் பாங்குகளை ஏற்படுத்தும் என்பதைக்கண்டறிய மணிப்புரி ஆட லின் பன்முகமாகிய நுட்பங்கள் பிறி தொரு வகையிலே பொருத்தமான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின் றன. கர்தால் சோலோம், மஞ்ஜிரா, பங்சோலோம், மஹாராஸ் வசந்த ராஸ். குஞ்யராஸ், நித்தியராஸ்'

கலாநிதி சபா. ஜெயராசா
கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கோபராஸ், உலூகல்ராஸ் முதலிய மணிப்புரி நடனக் கூறுகளில், ஆடும் கிராமங்களை அடியொற்றிய ஆடல் நுட்ப வேறுபாடுகள் காணப்படுகின் றன.

வங்காளத்திலும் ஒறிசாவிலும் காணப்படும் 'யாத்ரா' ஆடல் வடி வங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஆடல் உள்ளடக்கத்திலும், வடிவிலும், மாறுபாடுகள் கொண்ட இயல்புகளைக் காண முடியும் ராம யாத்ரா, துர்கா யாத்ரா, சிவயாத்ரா என்றவாறு பிரிவுகள் யாத்ரா ஆட லியலில் அமைந்துள்ள உலகியற் பாங்கான நடப்பியல், விகாரங்கள் உணர்வுகள், வன்செயல் வெளிப்பாடு முதலியவற்றைத் தமது வாழ்வியல் அனுபவங்களை அடியொற்றித் தெய் விகக் கதைகளைப் புலப்படுத்தும் ஆடற் கோலங்களும் காணப்படுகின் றன.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எருமை முட்டிய புராணம்

ஹரிவம்சன் என்ற போக்கிரிக்கு ஒரு வேலையும் கிடையாது. அதனால் அவன் ஏதாவது கோல்மால் செய்து பிழைத்து வந்தான். அவனுக்கு வயதாகவே ஒருநாள் இறந்து போனான்; இவன் செய்த அக்கிரமங்களுக்குக் கணக்கில்லாததினால் இவனுக்கு நரகம்தான் கிடைக்குமென ஊரவர்கள் பேசிக்கொண்டனர்.

மேல் உலகம் சென்ற ஹரிவம்சனை சித்திர குப்தன் தடுத்து நிறுத்தி ''உன்வாழ்வுப் புத்தகத்தைப் 'பார்த்தேன், நீ பாவத்தைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை: ஆகையால் நீ நரகத்துக்குத்தான் போகவேண்டும் வா'' என்றார்.

ஹரிவம்சன் உடனே ஐயா நீங்கள் நல்லவற்றை விட்டு தவறுதலாக கணக்கில் பதிவு செய்திருக்கிறீர்கள்'' என்றான்.

சித்திர குப்தன் இல்லை என்று சாதித்தான். இந்தக் கணக்குப் புத்தகத்தைப் பார். பர்ர்த்துவிட்டு சொல்பார்ப்போம் எனக் கணக்குப்புத்தகத்தைப் பிரித்துப்போட்டார். இதற்குள் எமதர்மராஜாவும் அங்குவந்துவிட்டார்.

ஹரிவம்சன் கணக்கைப்பார்த்துவிட்டு சித்திர குப்தனிடம் ''என்னய்யா கோதானம் கொடுத்தால் புண்ணியம் என்று சொல்வார்கள். நான் கொடுத்த கோதானத்தை பாவம்'' என்று கணக்கில் எழுதிஇருக்கிறாயே'' என்று இரைந்தான்.

நீ நல்ல மாடாகத்தானம் செய்திருந்தால் சரி. ஆனால் நீ சாகப்போகிற மாட்டைத்தானே தானம் கொடுத்தாய்'' அந்தமாடு தெருக்கோடிக்குப் போவதற்குள் செத்துவிட்டதே அதெப்படிப் புண்ணியமாகும்?

''உயிரோடுதான் நான் கொடுத்தேன். அதற்குக்காலம் முடிந்துவிட்டால் நீங்கள்தான் பொறுப்பு. நான் செய்த புண்ணியத்தை நீங்கள் எப்படிப்பாவமாக்கலாம்?'' என்றான் ஹரிவம்சன்.

## மணிமொழிக் கதை

இதைக்கவனித்த எமதர்மராஜன் ஹரிவம்சன் சொல்வதை சரிஎன ஒப்புக்கொண்டு ''அதற்காக என்ன செய்ய வேண்டும்'' என்று எமதர்மராஜன் கேட்டான்.

''அந்தப் புண்ணியத்திற்கு'' எனக்கு என்ன கிடைக்கும் என்று தெரிவித்தால் சொல்லுகிறேன் என்றான் ஹரிவம்சன்.

''நீ ஒருவரம் கேட்கலாம்'' என்றார் எமதர்மராஜன்.

அப்படியானால் சரி உன்னுடைய எருமைக்கடாவை எனக்குக் கொடுத்துவிடு.

இவ்வளவு சிறிய புண்ணியத்துக்கு இவ்வளவு பெரிய வரம் கிடைக்காது. வேண்டுமானால் அரைமணி நேரத்துக்கு மட்டும் எருமைக்கடாவை நீ வைத்துக்கொள்ளலாம் என்றார் எமதர்மராஜன்.

''அப்படியே ஆகட்டும் என் பேச்சைக் கேட்கவேண்டும் என்றுமட்டும் எருமைக்கடாவுக்கு உத்தரவு போட்டுவிடு''! என்றான் ஹரிவம்சன்.

உடனே எமன் தன் எருமைக்கடாவை வரவழைத்து அதற்கு உத்தரவு போட்டு ஹரிவம்சனிடம் ஒப்படைத்தான்.

எருமைக்கடாவைப் பெற்றுக்கொண்ட ஹரிவம்சன் அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு ''எமனைப் போய் முட்டு'' என்றான், எருமைக்கடா எமன் மேல் பாய்ந்தது. எமன் பயந்து ஓடினான். எருமையும் விடாமல் எமனைத்துரத்தியது.

எமன் பிரம்மாவிடம் தஞ்சமடைந்தான். ஹரிவம்சன் தொடர்ந்து வந்து 'பிரம்மாவையும் சேர்த்து முட்டு' என்றான்.

எமனும், பிரம்மாவும் பயந்து விஷ்ணுவிடம் ஓடினார்கள்.

''அங்கும் சென்று எமனையும், பிரம்மாவையும், விஷ்ணுவையும் சேர்த்து முட்டு என உத்தரவிட எல்லோரும் போய் சிவனிடம் முறையிட்டனர். சிவனையும் சேர்த்து முட்டு என்று உத்தரவிட்டு இதைப்போல் முப்பத்து முக்கோடி தேவர்களையும், மும் மூர்த்திகளையும் முட்டு என்று ஹரிவம்சன் சொல்ல எமன் குறுக்கிட்டு ''ஹரிவம்சா எருமைக்கடாவைவிட்டு இறங்கு அரைமணி நேரம் முடிந்துவிட்டது இனி நரகத்திற்குப் போக வேண்டியதுதான், ஆட்சேபனை இல்லையே'' என்று கேட்டான்.

''இனி எனக்கு நரகமில்லை: மும்மூர்த்திகளையும் ஒரேகணத்தில் தரிசனம் செய்தால் மோட்சம் என்று வேதபுராணங்கள் கூறுகின்றன. நானோ இங்கே மும்மூர்த்திகளையும், முக்கோடி தேவர்களையும் சேர்த்து தரிசித்துவிட்டேன் என்றான் ஹரிவம்சன்.

நீ சொல்வது சரிதான் வா சொர்க்கலோகத்திற்கு என்று ஹரிவம்சனை எமன் அழைத்துச் சென்றான்.

நன்றி - மணிமொழிக் கதைகள்.

## பூனைக்கு வரும் கடிதம்!

☆ அமெரிக்க அதிபர் பில் கிளின்டனுக்குஉலகமெங்கும் இருந்து ஒவ்வொரு நாளும் 22 ஆயிரம் கடிதங்கள் வெள்ளை மாளிகைக்கு வருகின்றன. கிளின்டன் அதிபராகப் பதவி ஏற்று 5 மாதங்களில் மட்டும் அவருக்கு 35 லட்சம் கடிதங்கள் வந்துள்ளன. இத்தகைய கடிதங்களுக்குப் பதில் அனுப்ப புதிதாக 200 பேரை வெள்ளை மாளிகை வேலைக்கு அமர்த்தியுள்ளது.

பில்கிளிங்டன் பெயரில் வெள்ளைமாளிகைக்கு வரும் பெரும்பாலான கடிதங்களில் பலர் '' அன்புள்ள ஜனாதிபதி '' என்றும், ஒரு சிலர் '' அன்புள்ளபில் '' என்றும் உரிமையோடும், வாஞ்ஞசயோடு எழுதுகிறார்களாம்.

கிளிங்டனின் மனைவியான ஹில்லாரிக்கும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. இவற்றுக்குப்பதிலளிக்க 50பேர்வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

கிளின்டனின் செல்லப் பிராணியான செல்சியா, சாளில் என்ற இரண்டு பூனைகளுக்கும் கூட தினமும் ஏராளமான கடிதங்கள், வருகின்றன. பூனைக்குக் கடிதங்கள் எழுதுபவர்களுக்கு அவற்றின் புகைப்படங்களை எடுத்து அனுப்பி வைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமையியல்..

(7ம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவதோடு அரசினது தலையீட்டிற்கும் ஏதுவாகும். தொழிலையும் அரசாங்கத்தினையும் ஒன்று சேர்ப்பதில் பல ஆபத்துக்களிருக்கின்றன பரந்த சமூகப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் தொழிலை அரசாங்கத்தினுடைய பாரம்பரிய நுதிக்கத்திற்கு நகர்த்தும் மேலும் எல்லா நிறுவனங்களுமே சமூகத்தினது எல்லாத் தேவைகளுக்கும் சேவை செய்ய மூடியாது.

சமூகப்பிரச்சனைகள் மிகவும் கவனத்திற்குரிய தொன்றாக இருப்பதனால் இப்பிரச்சனைகளைக் கையாள்வதில் இருக்கின்ற நிறுவனங்கள் பயனுறுதி மிக்கதாக இருக்க வேண்டும். அல்லாவிடில் அவை சமூகத்திலிருந்து நீக்கப்படலாம். எடுத்துக்காட்டாக சமூகப்பொறுப்பில் ஏற்படும் தவறுகள் அரசாங்கத்தினது தலையீட்டிற்குவழி வகுத்திருக்கின்றது; இதனாலேயே ஒரு நிரு நிறுவனம் தனது பொருளாதார சமூக சக்திகளிடையே ஓர் ஏற்கத்தக்க சமநிலையை அடைய வேண்டும். எனக்கூறப்படுகின்றது. அல்லாவிடில் அவை தமது சுதந்திரத்தினையும் நீடித்திருக்கும் ஆற்றலினை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம்

**பிறேமகலா நவரட்ணம்**

நன்றி - முகாமை நோக்கு

# தெரிந்து கொள்ளுங்கள்

☆ உலகில் இன்று மூன்றுஇலட்சத்திற்கும் மேலான ''இயந்திர மனிதர்கள்,' உருவாக்கப்பட்டுள்ளனர். வீடுகளில் சமையல்வேலை செய்வது முதல் ஆகாயவிமானம் ஒட்டுவது வரை இந்த இயந்திரமனிதர்கள் பணி செய்கிறார்கள்.

☆ குழந்தைகள் பிறக்கும்போதுபற்களுடன் பிறப்பது அரிது. பிரான்ஸின் கடசிமன்னான 14-ம் லூயிஸ் பிறக்கும்போது இரண்டு பற்களுடன் பிறந்தாராம்.

☆ மிகப்பெரிய புகையிரத நிலையம் நியூயோர்க்கில் உள்ள ''கிராபன்ட் சென்ற்ரல் டெர்மினல்'' என்னும் புகையிரத நிலையமாகும். இதன் விஸ்தீரணம் 48 ஏக்கர். மொத்த ரயில் பாதை (Track) 74. தினமும் 550 புகையிரதங்கள் வந்துபோகின்றன.

☆ அதிவேக புகையிரதம் பிரான்சின் டி. ஜி. வீ. (T. G. V ) புகையிரதம் மணித்தியாலம் 515 கி. மீ. வேகத்தில் ஒடும்.

## இன்றைய நாடு;
# யூகோஸ்லாவியா

பால்கன் நாடுகளில் ஒன்றான யூகோஸ்லாவியா, செர்பியா, மொன்டெனெக்ரோ, குரோஷியா, ஸ்லோவேனியா, மாசிடோனியா, பொஸ்னியா. ஹெர்சேகோவினா ஆகிய ஆறு குடியரசுகளை கொண்டிருந்தது. செர்பியா, மொன்டெனெக்ரோ என்னும் இரண்டு குடியரசுகளைத்தவிர ஏனைய குடியரசுகள் 1991ல் தனிநாடுகளகப் பிரிந்துவிட்டன.

1945ல் குடியரசானயூகோஸ்லாவியாவில் மார்ஷல்டிட்டோவின் தலைமையில் கம்யூனிச ஆட்சி நடைபெற்றது. 45வருட கம்யூனிச ஆட்சி மாறியதும் நாடு பிளவுபட்டது.

இந்நாடு வடக்கே ஹங்கேரியையும், கிழக்கே ரோமேனியா மற்றும பல்கேரியாவையும், தெற்கே அல்பேனியா, மற்றும்மசெடோனியாவையும் மேற்கே குரோஷியா, பொஸ்னியா, ஹெர்ஸெகோவினா ஆகிய நாடுகளைக்கொண்டுள்ளது.

இந்நாட்டின் தலைநகர் - பெல்கிரேட்

பரப்பளவு - 1,02,173 சதுரக் கிலோமீற்றர்,

மக்கள்தொகை - 1.08கோடி

பேசப்படும் மொழிகள் - செர்போ, குரோஷியன், அல்பேனியன் ஸ்லோ வேனியன், மாஸிடோனியன்

மக்களின் கல்வியறிவு - 90%

சமயம் - கிறீஸ்தவம், இஸ்லாம்

நாணயம் - புதியடினார்

தனிநபரின் வருமானம் - 5040 டொலர்.

இந்நாட்டின்பொருளாதாரம்- முக்கிய பயிர்களான கோதுமை உருளைக்கிழங்கு, இனிப்புக்கிழங்கு, மற்றும் புகையிலை என்பவற்றிலும், மின்சாரம், நிலக்கரி, இரும்பு, உருக்கு, சீமெந்து, மரபபொருட்கள் மோட்டார் வாகனங்கள் சார்ந்த தொழில்களில் தங்கி உள்ளது.

**பாலூட்டும்தாய்மாருக்கும் வளரும் குழந்தைகளுக்கும்**

நெத்தலி புரதம், கல்சியம் பொசுபரசு என்பவற்றை அதிக அளவில் கொண்ட ஒரு மாமிச உணவு. இதைக் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், வளரும் குழந்தைகள். அனைவரும் உட்கொள்ள வேண்டும். 100 கிராம் நெத்தலிக்கருவாட்டில் 48.1 கிராம் புரதம், 356 மில்லிகிராம் கல்சியம் 433 மில்லிகிராம் பொசுபரக என்பன உண்டு.

# இலக்கியச் சிதறல்

☆ சங்க காலத்தில் வாழ்ந்த மொத்தப் புலவர்கள் - 473 பேர்கள். இவர்களில் - 30 பேர்கள் பெண்கள்.

☆ 31 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட முதல் தமிழ் இலக்கிய நூல் திருக்குறள். இந்நூல் 10 இந்திய மொழிகளிலும், 5 ஆசியமொழிகளிலும், 16 ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

☆ முதன்முதல் அச்சில் பதிக்கப்பட்ட தமிழ் படைப்பு ''ஆடெம் டிப்ரோயென்கா'' எழுதிய தமிழ் போர்த்துக்கீஸ் அகராதியாகும்.

# கல்வி உத்தியோகத்தர் ஒன்றியம்

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்கள் ஒன்றியம் கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. பெ கனகசபாபதி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது இவ் வைபவத்தில் கூட்டுறவுச்சபைமாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொண்டார்.

கல்வி உத்தியோகத்தர் ஒன்றிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்;

தலைவர், திரு ச. பாலசிங்கம், உபதலைவர் திரு. மு. சிதம்பரப்பிள்ளை, செயலாளர் திரு. சு. சண்முகம், பொருளாளர் திருமதி பிறேமஜெகன், உறுப்பினர்கள் திருமதி எஸ். பரமானந்தன் திருவாளர்கள், இ. சவுந்தரநாயகம், எம். பத்மநாதன், எஸ். தர்மகுலசிங்க, பி இராதாக்கிருஷ்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. P.O
SriLanka Under No K . J. V. 59 /87

ஐக்கியதீபம் சித்திரை - 1999

## கூட்டுறவுச் சங்கங்கள்

# புதிய உற்பத்தித் துறைகளில் ஈடுபட திறனானமுகாமைத்துவம் அவசியம்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருட்களை மட்டும் விநியோகிக்கும் நிலையங்களாக செயற்படாமல் உற்பத்தித்துறையிலும், அறிவுசார்ந்த துறைகளிலும் ஈடுபட முன்வர வேண்டும் இல்லாவிட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் வருங்காலத்தில் தனியார் துறையுடன் போட்டிபோட்டுவளர்ச்சி பெறமுடியாது. ''

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்களுக்கான வாண்மை அபிவிருத்தி செயலமர்வினை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக்கல்வி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையும், யாழ். மாவட்ட கூட்டு சபையும் இணைந்து இரண்டு நாள் செயலமர்வினை ஒழுங்கு செய்திருந்தனர்.

யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத்தலைவர், திரு க.தேவராசா செயலமர்விற்குத் தலைமைவகித்தார்

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது.

இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவுத் துறைக்குப் புதிய பரிணாமம் வேண்டும். அரச உதவியும், நிதியும் இருப்பதினால், கிராமிய மட்டத்திலும், புதிய கைத்தொழில் துறைகளை முன்னெடுக்கவேண்டும். இதற்கு திறமையான முகாமைத்துவத்துடன் வியாபாரத்துறையில் தொழில்நுட்ப அறிவும் அவசியம் இருக்க வேண்டும்.

கூட்டுறவின்மூலம் மக்களை ஒன்றாகசேர்க்கவேண்டும். இதன் மூலம் பலமும் ஏற்படும், பலவீனமும் ஏற்படும் பலபேர் ஒன்றுசேர்ந்துபிரச்சனைகளை அணுகும் போது பலசிக்கல்கள்தோன்றும் எனினும் இதனை நிவர்த்தி செய்ய திறனான முகாமைத்துவத்துடன் புனிதமான கூட்டுறவு இலட்சியத்திற்கு கீழ் வேலை செய்வதற்கு பொது முகாமையாளர்களாகிய நீங்கள் தயாராக இருக்க வேண்டும். இதற்கு வேண்டிய சகல துறைகளிலுமான பயிற்சிப்பட்டறைகளை யாழ் பல்கலைக்கழகம் மாவட்ட கூட்டுறவு சபையுடன் நல்லுறவை ஏற்படுத்தி நடாத்தத் தயாராக உள்ளது என்று கூறினார்.

இரண்டு நாள் செயலமர்வில், யாழ். பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை தலைவர் திரு க. தேவராசா வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ இரத்தினம், மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு க. சிவானந்தமூர்த்தி ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

இரண்டுநாள் செயலமர்வில் கலந்து கொண்ட பொது முகாமையாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# மனையியல் பயிற்சி

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் ஒன்றிணைந்த மகளிர் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ். புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், கரவெட்டிபனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து சங்க மகளிர் உறுப்பினர்களுக்கு அடிப்படை மனையியல் பயிற்சி நெறி ஒன்றினை நடாத்தி வருகின்றது.

ஆறு மாதங்களைக் கொண்ட இப்பயிற்சி நெறியில் 50 மகளிர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## இடம்பெயர்ந்தும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உதவ யாழ் பல்கலைக்கழகம் என்றும் தயாராக உள்ளது. என்றுகூறினார்

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் தனது வாழ்த்துரையில் கூறியதாவது.

இலங்கையில் கூட்டுறவு இயக்க வரலாற்றில் முன்மாதிரியாகத் திகழ்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் பல கூட்டுறவாளர்கள் கூட்டுறவு இயக்கத்தை அணி செய்தார்கள். இலங்கை கூட்டுறவு இயக்க வரலாற்றில் உள்ளசிறப்புஅம்சங்களைஇளைய தலைமுறையினர் அறிந்தும், தெரிந்தும் கொள்ளக்கூடிய வகையில் ''கூட்டுறவுக்கோர் அறிமுகம் '' என்னும்'' நூலை வெளியிட்டுவைத்த தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி தனது வாழ்த்துரையில் கூறியதாவது.

1979ம் ஆண்டு தென்னிலங்கைக் கூட்டுறவாளர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோது, நவீனத்துவ தொடர்புடைய கூட்டுறவு பற்றிய நூல் இல்லாத குறைபற்றி சிந்திக்கப்பட்டது முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை அவர்களின் ஒத்துழைப்புடன் இந்நூல் முன்னர் வெளியிடப்பட்டது. இப்பொழுது புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டு வெளிவரும் இந்நூல் கூட்டுறவுத் துறை சார்ந்த மாணவர்களுக்கு சிறந்த பாடநூலாக அமையும் என்று கூறினார்.

யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் திரு க. தேவராசா அறிமுகஉரையையும் யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ. இரத்தினம் மதிப்பீட்டுரையும் நிகழ்த்தினார்கள்.

தெல்லிப்பளைபலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு சி. சிவமகாராசா வரவேற்புரையையும், மாவட்டச் செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றி உரையையும் நிகழ்தினார்கள்.

அரச அதிபர் திரு. க. சண்முகநாதனிடம் இருந்து நூலின் முதல் பிரதியை முதுபெரும் கூட்டுறவாளர் திரு. க இ குமாரசுவாமி பெற்றுக் கொண்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ், மா, கூ, சபையினரால் 1999 ம் ஆண்டு சித்திரை மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org